## சுருக்கம்

பணியாளர்கள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – இளநிலை உதவியாளர் / இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் / தட்டச்சர் – தகுதிகாண் பருவம் முடிக்க பவானிசாகரில் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சி பெறுதலில் நிர்வாகக் காரணங்களினால் கால தாமதம் ஏற்படுதல் குறித்து வெளியிடப்பட்ட அறிவுரைகள் – நேரடி நியமன உதவியாளர்களுக்கும் நீட்டித்தல் – அறிவுரைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை**

அரசாணை(நிலை) எண். 64

நாள் 30.06.2016
துன்முகி வருடம், ஆனி 16,
திருவள்ளுவராண்டு 2047

படிக்க:

1. அரசு கடித எண்.38808/1989–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 07.07.1989.
2. அரசு கடித எண்.71720/1992–1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள். 02.12.1992.
3. அரசு கடித எண். 56505/பி1/1999–2, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பி) துறை, நாள் 21.01.2000.

********

ஆணை:

தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான சிறப்பு விதிகளில் விதி 34(a) உடன் படிக்கப்பட்ட பிற்சேர்க்கை–V–ன்படி, இளநிலை உதவியாளர்/தட்டச்சர்/நேரடி நியமன உதவியாளர் போன்ற பதவியில் பணியமர்த்தப்படுபவர்கள், தகுதிகாண் பருவம் விளம்பிட பவானிசாகரில் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியில் தேர்ச்சி பெறுதல் வேண்டும் என ஒரு தகுதியாக விதிகளில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இப்பயிற்சி பணியாளர் அவரது பதவியில் வரன்முறை செய்யப்பட்ட பின்னர் பணி முதுநிலைப்படி அளிக்கப்படுகிறது. ஆனால், மேற்படி பயிற்சி நிலையத்தில் போதிய இடமின்மையால், இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர்கள்/நேரடி நியமன உதவியாளர்கள் போன்றவர்கள் அடிப்படைப்பயிற்சி அளிக்க காலதாமதம் ஏற்படுகிறது.

2. எனவே, பார்வை 3–ல் காணும் அரசு கடிதத்தில் இளநிலை உதவியாளர்கள்/ இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர்/தட்டச்சர் பொருட்டு பவானிசாகரில் அளிக்கப்படும் அடிப்படை பயிற்சியினை பெறுவதில் காலதாமதம் ஏற்படும் நிகழ்வுகளில் மேற்படி கருத்துருக்களை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் இசைவிற்கு அனுப்பாமல், சம்பந்தப்பட்ட துறைச் செயலர்களே, விதிகளைத் தளர்த்தி சம்பந்தப்பட்ட நபர்கள் தகுதிகாண் பருவம் முடித்ததாக ஆணை பிறப்பிக்கலாம் என அறிவுறுத்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது, இளநிலை உதவியாளர் உடன் தட்டச்சர் என்ற பணியிடம் நடைமுறையில் இல்லை.

த.பி.பா

3. தற்பொழுது பல்வேறு துறைகளில் நேரடி நியமன உதவியாளர்கள் நியமனம் செய்யப்பட்டு வருவதால் அவர்கள் பொருட்டு தகுதிகாண் பருவம் விளம்பிட பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி நிறைவு செய்தல் ஒரு தகுதியாக தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான சிறப்பு விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ளதால், பார்வை 3–ல் காணும் அரசு கடிதத்தின்படி வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் நேரடி பணி நியமன உதவியாளர்களுக்கும் அப்பயனை நீட்டிக்கலாம் எனக்கருதி தீவிரப்பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான சிறப்பு விதிகளின் கீழ் நேரடி பணி நியமனம் பெறும் உதவியாளர்களுக்கு பவானிசாகரில் அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியினை பெறுவதில் காலதாமதம் ஏற்படும் நிகழ்வுகளில், மேலும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு, மேற்படி கருத்துருக்கள் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் இசைவிற்கு அனுப்பாமல், சம்பந்தப்பட்ட துறைச் செயலாளர்களே, சுற்றோட்டத்தில் ஆணை பெற்ற பின் உரிய விதிகளை தளர்த்தி சம்பந்தப்பட்ட நபர்கள் தகுதிகாண் பருவம் விளம்பியதாக ஆணை பிறப்பிக்கலாம் என அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகின்றன.

(ஆளுநரின் ஆணைப்படி)

சீ. ஸ்வர்ணா
அரசு செயலாளர்

பெறுநர்
மாண்புமிகு அமைச்சர்(நிதி(ம)பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9
அரசு செயலாளர் அவர்களின் தனிச் செயலர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–9.
அனைத்துத் துறை அரசு செயலாளர்கள், சென்னை–9
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9

<u>நகல்</u>
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பயிற்சி–1) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(நி.சீ.2) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

தெய்வநாயகி 30/6/16
பிரிவு அலுவலர்
30/06/16